
# அலைமாடம்

## கலை இலக்கிய சஞ்சிகை - 2017

## அலை - 04

In memory of
Mr.S.A.E.Ratnarajah
Teacher (1957-1976)
Principal (1976-1995)
of this College
Funded by his beneficiary
2014.05.20




### தமிழ் மன்றம்
### யா/புனித அந்தோனியார் கல்லூரி
### ஊர்காவற்றுறை

# அலைமாடம்

கலை இலக்கிய சஞ்சிகை

2017

அலை 04

தமிழ் மன்றம்

யா/புனித அந்தோனியார் கல்லூரி

ஊர்காவற்றுறை

மலரின் பெயர் - அலைமாடம்

மலராசிரியர் - செல்வி. ட.டாளினி

பொறுப்பாசிரியர் - திருமதி.ஜெ.விநாயகசீலன்

பதிப்பு - 2017

அட்டைப்பட வடிவமைப்பு - செல்வி. உ. கௌதமி

பக்கங்களின் எண்ணிக்கை- 30

வெளியீடு - தமிழ் மன்றம்

யா/புனித அந்தோனியார்

கல்லூரி

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்தும்
வளர்மொழி வாழியவே

பாரதியார்

# கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

யா/புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றத்தினால் வெளியிடப்படும் "**அலைமாடம்**" என்னும் கலை இலக்கிய சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் உளம் பூரிக்கிறேன்.

எமது கல்லூரி பல்திறமும் ஆளுமையும் கொண்ட கல்லூரி. பல்வேறு வகையான போட்டிகளிலும் கலந்து கொண்டு மாணவர்கள் தங்களது ஆற்றல்களை வெளிக்காட்டி வருகின்றனர். அவ்வகையில் படைப்பாற்றல் மூலமும் தமது திறமைகளை வெளிப்படுப்படுத்த வேண்டும் என்னும் நோக்கில் இச்சஞ்சிகையை ஆக்கியுள்ளனர். இதில் இடம் பெற்றுள்ள ஆக்கங்கள் யாவும் மாணவர்களது ஊக்கத்தினையும் ஆர்வத்தினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. அத்தோடு தொடர்ந்து வரும் தலைமுறையினருக்கும் இது உற்சாகப்படுத்தும் மருந்தாக அமையும். எனவே தொடர்ந்தும் அலைமாடம் சிறப்புற்று உயரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

வணபிதா.க.ஜேம்ஸ் சிங்கராயர்
அதிபர்
யா/புனித அந்தோனியார்
கல்லூரி.

## தலைவர் உள்ளத்திலிருந்து.........................

அலைகடல் நடுவே ஒளி விளக்கம் போல சப்த தீவுகளின் நடுநாயகமாகத் திகழும் காவலூரில் செலுமை பெற்று விளங்கும் புனித அந்தோனியார் கல்லூரியில் வினைத்திறனுடன் செயற்பட்டு வரும் தமிழக்கிய மன்றமானது தனது செயற்பாடுகளில் ஓர் செயற்பாடாக வருடாந்தம் முத்தமிழ் விழாவில் அலைமாடம் சஞ்சிகையினை வெளியிட்டு வருகின்றது.

அந்த வகையில் தமிழிலக்கிய மன்றமானது இவ்வருடம் அலைமாடம் 4 சஞ்சிகையினை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்ற அதே வேளை இச் சஞ்சிகையினை வெளிவிடுவதற்கு ஆக்கங்களை தந்துதவிய எமது கல்லூரி மாணவர்களுக்கும் அத்துடன் அச்சுப் பதிப்பதற்கு உதவிய மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் சஞ்சிகைக்கான ஆக்கங்களைத் தொகுத்தளித்த தமிழிலக்கிய மன்ற உறுப்பினர்களும் இச்சஞ்சிகையினை வெளியிட முழு மூச்சுடன் உழைத்த திருமதி ஜனனி விநாயகசீலன் அவர்களுக்கும் செல்வி சிவாஜினி அவர்களுக்கும் அவர்களுக்கும் எமது மன்றத்தின் சார்பில் இருகரம் கூப்பி சன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அலைமாடம் 4 சஞ்சிகையானது எம்து மாணவர்களது ஆக்கங்களைத் தாங்கி எமது மாணவர்களின் தமிழ் ஆற்றலை பறைசாற்றி நிற்கின்ற கண்கூடான உண்மை.

அ.பெ.ஜெனிஃபர்

2018 கலை

## பொறுப்பாசிரியர் உள்ளத்திலிருந்து.......

எம் கல்லூரி முன்னிருந்து எம்மையெல்லாம் இயக்கிக் கொண்டிருக்குகின்ற அந்தோனியாரை மனதில் இருத்திக்கொண்டு எனது சிந்தனையில் எழுந்த சில எண்ணங்களை இங்கு தவழ விடுவதில் உளம் பூரிப்படைகிறேன்.

ஸப்த தீவுகளில் ஒன்றாக விளங்கும் ஊர்காவற்றுறையிலே அலைகளின் தழுவலில் உயர்ந்த மாடங்களைக் கொண்டு விளங்குகிறது. யா/புனித அந்தோனியார் கல்லூரி. இக் கல்லூரியின் தமிழிலக்கிய மன்றமானது அலைமாடம் சஞ்சிகையினை வருடம் தோறும் வெளியிட்டு வருகிறது. அந்த வரிசையில் இவ் வருடம் தமிழிலக்கிய மன்றமானது நான்காவது அலைமாடத்தை வெளியிடுவதில் பேருவகை கொள்கின்றது.

மாணவர்களது ஆற்றல்களையும், ஆளுமைகளையும் வெளிக்கொணரும் ஓர் ஊடகமாக அலைமாடம் அமைந்துள்ளது. முத்தமிழும் சங்கமிக்கும் முத்தமிழ் விழாவின் போது இச் சஞ்சிகையை பிரசவிப்பது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கிறது. வருடம் தோறும் எமது கல்லூரியில் அலைமாடம் தடம்பதிக்க வேண்டும் என வாழ்த்தி, இச் சஞ்சிகையை உங்கள் கைகளில் தவழச் செய்ய ஆக்கமும் ஊக்கமும் அளித்த நல்லுள்ளங்களுக்கு நன்றி பூக்களை சொரிந்து நிற்கின்றேன்.

திருமதி. ஜெ. வினாயகசீலன்.
ஆசிரியர்

## இதழாசிரியர் உள்ளத்திலிருந்து.....

ஏமது பாடசாலையில் அலைமாடம் என்கின்ற இச் சஞ்சிகை வெளிவரவது பெரு மகிழ்ச்சிக்குரிய ஓர் விடயமாகும். மாணவர்களின் தேடல்களின் வெளிப்பாடும் அவர்களுடைய ஆக்கத் திறனையும் அறிவியல் பார்வையினையும் இவ் இதழ் ஊடாக கண்டுகொள்ளலாம். இச் சஞ்சிகை ஆக்கத்திற்க ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைத்து உள்ளங்களுக்கம் மனமார்ந்த நன்றிகள். மிகக் குறுகிய காலத்தில் இச் சஞ்சிகை மிக்க சிரமத்தின் மத்தியில் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. இது போன்ற இதழ்கள் இனிவரும் காலத்திலும் வெளிவரவேண்டும் என்பதே அனைவரினதும் விருப்பம். இவ் விருப்பம் செயல் வடிவம் பெற்றிட இறைவனின் ஆசியை வேண்டி நிற்கிறோம்.

செல்வி ட.டாளினி

2018 கலை

## நூலின் உள்ளே............ பக்கம்


| | |
|---|---|
| 1. ஆச்சரியமான தகவல்கள் | 01 |
| 2. பொன்மொழிகள் | 02 |
| 3. பழமொழிகள் | 03 |
| 4. ஐசாக் நியூட்டன் | 04 |
| 5. தாய்மொழி | 05 |
| 6. உயிரக்கு நிகரான தமிழ் | 06 |
| 7. இளமையில் நீங்கள் செய்ய வேண்டிய சில விடயங்கள் | 07 - 08 |
| 8. ஏமாந்த நாய் | 09 |
| 9. சூழல் பாதுகாப்பு | 10 - 11 |
| 10.இனிமைத் தாய்மொழி | 12 |
| 11.மாணவ மணிகளுக்கு கலாமின் அறிவுரைகள் | 13 - 14 |
| 12.பொது அறிவு | 15 |
| 13.கண்டுபிடிப்புக்களும் கண்டுபிடிப்பாளர்களும் | 16 |
| 14.கொடை வள்ளல் | 17 - 18 |
| 15.கம்பியூட்டர் சில விளக்கச் சொற்கள் | 19 |
| 16.இலங்கையின் கல்வி பற்றிய தகவல்கள் | 20 |
| 17.ஐ.நா பற்றிய தகவல்கள் | 21 |
| 18.உலகில் வழங்கப்படும் விருதுகள் | 22 |
| 19.இணைமொழிகள் | 23 |
| 20.கலைச் சொற்கள் | 24 |
| 21.தமிழ் இலக்கியம் | 25 - 26 |
| 22.ஈரநிலங்களும் அவற்றின் முக்கியத்துவமும் | 27 – 29 |
| 23.நன்றிப்பூக்கள் | 30 |

# ஆச்சரியமான தகவல்கள்

1. அன்னாசிப் பழத்தில் விதைகள் இல்லை.
2. அத்தி, பலா மரங்கள் பூப்பதில்லை.
3. அரேபியால் ஆறுகள் இல்லை.
4. ஆண்டார்டிக்காவில் மரங்கள் இல்லை.
5. இந்தியாவில் மரங்கள் இல்லை.
6. ஜோர்தான் நதியில் மீன்கள் இல்லை.
7. சிங்கப்பூரில் காக்கைகள் இல்லை.
8. பூட்டானில் திரை அரங்குகள் இல்லை.
9. நேபாளத்தில் பகலில் மழை பெய்வதில்லை.
10. காந்தி அடிகள் விமானத்தில் பயணம் செய்ததில்லை.
11. பறவைகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை.
12. மலைப் பாம்புகளுக்கு விசம் இல்லை.
13. கிவிப்பறவைக்கு இறக்கை இல்லை.
14. கடலில் முதலைகள் இல்லை.
15. யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை.
16. ஆமைக்கு பற்கள் இல்லை.
17. வண்ணாத்துப் பூச்சிக்கு வாய்கள் இல்லை.
18. நட்சத்திர மீன்களுக்கு மூளை இல்லை.

## பொன்மொழிகள்

- ✓ நீ செய்த தவறுகளை வாழ்த்து. அவைகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருக்கின்றன.
- ✓ அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்து தந்தே தீரும்.
- ✓ உங்களால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாக சேவைதான் செய்ய முடியும்.
- ✓ கீழ்ப்படியக் கற்றுக் கொள். கட்டளை இடும் பதவி தானாக உன்னை வந்து அடையும்.
- ✓ உற்சாகமாக இருக்க தொடங்குவது தான் வெற்றிகரமான வாழ்க்கையை வாழ தொடங்குவதற்கான முதல் அறிகுறி.
- ✓ சுடுகாட்டுக்கு அப்பாலும் எம்மைத் தொடர்ந்து வருகிற ஒரே நண்பன் நல்லொழுக்கம். மற்றவை யாவும் மரணத்துடன் மடிந்து விடும்.
- ✓ பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திருப்பி வந்து விடும்.
- ✓ பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்ய வேண்டிய வேலை தட்டிக் கொடுப்பது மட்டும் தான்.
- ✓ நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை.
- ✓ தூய்மையாக இருப்பதும்,பிறருக்கு நன்மை செய்வதும் தான் சர்வமத வழிபாடு.

சி.நவநிதா
கலை (2018)

# பழமொழிகள்

1. அடி மேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
2. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
3. அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி.
4. ஆழம் அறியாமல் காலை விடாதே.
5. ஆத்திரக் காரனுக்கு புத்தி மத்திமம்.
6. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.
7. குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி மங்காது.
8. இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை.
9. கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.
10. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு.
11. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
12. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
13. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
14. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
15. பதறாத காரியம் சிதறாது.

தி.கிங்ஸ்ரன்.

# ஐசாக் நியூட்டன்

- ஐசாக் நியூட்டன் ஒரு விஞ்ஞானி ஆவார்.
- 1647 ம் ஆண்டு நத்தார் தினத்தன்று ஐசாக் நியூட்டன் பிறந்தார்.
- இளமைப் பருவத்திலேயே காற்றாடி, நீர்ச்சக்ரம் போன்றவற்றை செய்யும் முயற்சில் ஈடுபட்டார்.
- இவர் தாயின் வயிற்றில் இருந்த போதே இவரின் தந்தை இறந்து போனார்
- ஐசாக் நியூட்டன் தனது 22 வது வயதிலே பட்டதாரியானார்
- ஐசாக் நியூட்டன் தனது 26 ஆவது வயதில்
- கணித பேராசிரியாக விளங்கினார்.

றொ.நிலக்ஷன் றொய்ஸ்

தரம்:-6B

# தாய்மொழி

தாய்மொழியை போற்றுவோம் - அது
தழைக்க தொண்டு ஆற்றுவோம்
தாயைப் போல எண்ணியே
தாங்கி நெஞ்சில் வாழ்த்துவோம்

அன்னை மொழியில் படிப்பதால்
அனைத்தும் எளிதில் புரியுமே
கண்ணில் தெரியும் வெளிச்சம் போல்
கருத்து முழுவதும் விளங்குமே

உள்ளக் கருத்தை உணர்த்தவும்
உணர்ச்சி பொங்க விளங்கவும்
சொல்லும் கருத்தை சுவைக்கவும்
வல்ல மொழியே தாய்மொழி

வேறு மொழியில் படிப்பதால்
விரிந்த அறிவு வளரலாம்
தூரமான நாட்டுடன்
தொடர்பு கொள்ள உதவலாம்

ஆனபோதும் தாய்மொழி
அறிவு சேர்க்க நல்வழி
மானம் நமக்கு தாய்மொழி
மனதில் கொண்டு நீ செழி

# உயிருக்கு நிகரான தமிழ்

உயிக்கு நிகரான தமிழ் மொழியை
உலகெல்லாம் போற்றும் உயர் மொழியை
வாழ்த்தி வணங்க வந்தேன் - நீ
வாழ்க வாழ்க என்றே

அமுதெனும் நாமம் பெற்ற தமிழ்
அழகாம் இறைவன் அளித்த தமிழ்
அன்னையாய் எல்லோரும் கொள்ளும் தமிழ்
என் அன்னைத்தமிழ் நீ வாழியவே!

காவியம் பலவும் படைத்த தமிழ்
காலத்தை வென்ற தமிழ் கன்னித்தமிழ்
ஏட்டினில் எழுந்த என் தமிழே – சிங்க
ஏறு போல் நீ வீறுகொள்வாய்

நாலடியாரை நல்லுலகு நலமே போற்ற
நன்மை அளித்த தமிழ்
ஈரடி அதனுள் உலகதனை
அடக்கிடும் குறள் கொடுத்த தமிழ்

தாரணி மாந்தர் தலை தாழ்த்தி
வணங்கிடும் தாய்த்தமிழே
தாரணியை நீ தலையாய் வென்று
தலை நிமிர்ந்திடுவாய் தமிழ்த் தாயே!

அ. பெ. ஜெனிஃபர் கலை(2018)

# இளமையில் நீங்கள் செய்யவேண்டிய சில விடயங்கள்

## சொந்தக் காலில் நில்

அம்மா, அப்பா, அண்ணா மற்றவர்களிடம் உதவி நாடி இருக்காமல் உங்கள் சொந்தக்காலில் நிற்கும் அளவிற்கு நீங்கள் நல்ல நிலையை அடைந்திருக்க வேண்டும். நால்வருக்கு உதவ வேண்டும் என்பதில்லை. யாருடைய உதவியும் இன்றி வாழ்வது என்பதே கௌரவம்.

## உலகம் சுற்றும் வாலிபன்

குறைந்தபட்சம் இந்தியா, சிங்கபூர், மலேசியா போன்ற இடங்களுக்காவது சென்று வந்திட வேண்டும். புது இடம் புதிய கலாச்சாரம் உங்களை நீங்களே மெருகேற்றி கொள்ளவும் , புத்துணர்ச்சி அடையவும் பெருமளவு உதவும்.

## பேரார்வம்

பேரார்வம் என்பது உங்கள் வேலையை குறப்பது. ஆரம்பத்தில் வேலை வேண்டும் என்பதற்காக ஏதாவது வேலையில் சேர்திருக்கலாம். ஆனால் 25 வயது, 30 வயதுக்குள் உங்களுக்கு பிடித்த வேலையில் சேர்ந்து விடவேண்டும்.

## தோல்வி

தோல்வியிலிருந்து கற்காத பாடத்தை நீங்கள் வேறு எங்கும் கற்க முடியாது. தோல்வி உங்களை ஒழுங்குபடுத்தும் ஆசான். ஒரு தோல்வியையாவது நீங்கள் சந்தித்துவிடவேண்டும். இல்லையேல் பிறகாலத்தில் ஏற்படும் சிக்கல்களை கையாள முடியாது.

## முதலீடு

சம்பாதித்த பணத்தை வருமானம் ஈட்டும் வகையில் எதிலாவது முதலீடு செய்து வைத்துவிட வேண்டும். அதை செலவு செய்யாமல் வருங்காலத்தில் சேமிக்க வேண்டும்.

## தீய பழக்கம்

ஏதேனும் ஒரு கெட்ட பழக்கத்தையாவது இளமை வயதுக்குள் நிறுத்த வேண்டும். கெட்ட வார்த்தை பேசுதல் பெண்மையை கொச்சையாக எண்ணுதல், புகை, மது என ஏதாவது பாவித்தல் போன்ற எந்தக் கெட்ட பழக்கமும் இல்லையா நீங்கள் உங்களுக்கொரு சபாஷ் பொட்டுக் கொள்ளுங்கள் ஏனெனில் கெட்டவர்களை இந்த உலகம் கேலி கிண்டல் செய்யும்.

## உண்மையான நட்பு

எவ்வளவு பெரியதுன்பம் வந்தாலும் எவ்வளவு உங்கள் அருகில் நின்று தோள் கொடுக்க ஒரு தோழமை. எந்த எதிர் பார்ப்பும் இல்லாத உண்மையான தோழமையை அமைத்துக் கொள்ளவேண்டும்.

## சேமிப்பு

பெரும்பாலும் இளமைவளதைக் கடக்கும் போது சிலர் திருமணமாகியும் சிலர் குழந்தை குட்டி என இருப்பார்கள் எனவே அடுத்த தலைமுறைக்கான சேமிப்பை அளவிற்கு குறையாமல் எடுத்து வைக்க வேண்டும். இது உங்களின் கடமையாகும்.

க. நிவிதன்

# ஏமாந்த நாய்

ஓர் ஊரில் ஒரு உணவகம் இருந்தது. உணவகத்தின் பின்புறத்தில் சமையற்காரன் வடை சுட்டுக் கொண்டிருந்தான். காக்கா ஒன்று யன்னலில் காத்திருந்தது. சமையற்காரன் விறகு எடுப்பதற்காக குனிந்திருந்தான். காகம் வடை ஒன்றை கொத்திக் கொண்டு பறந்தது.

அவ்வேளையில் ஒட்டல் முதலாளி வந்தார். சமையலாளனை ஏசினார். எவனாவது பையன் திருடி இருந்தால் அவர் அடித்திருப்பார். காகத்தை அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

காகம் வேம்பமரம் மீது உட்கார்ந்து மற்ற காகங்களை அழைத்து உணவு உண்ண எண்ணியது. அதற்கிடையில் ஓர் நாய் காகத்தை அண்ணாந்து மேலே பார்த்து வாயை நீட்டியது. அதிலிருந்து நீர் சொட்டியது. காகத்தை ஏமாற்றி வடையைப் பறிக்க எண்ணியது.

காக்கையாரே! காக்கையாரே! நீ அழகான பறவை. குயில் குஞ்சைக் கூட நீ தான் அடைகாக்கிறாய். நீ ஒரு பாட்டு பாடு என்று நாய் சொன்னது. காகம் வடையைக் காலில் வைத்து பாடியது.

என் பாட்டி நரியிடம் ஏமாந்த கதை எனக்கு தெரியும்.... நீ...என்னை ஏமாற்ற இயலாது என காகம் எச்சமிட்டு பறந்து சென்றது. ஏமாந்த நாய் தலை குனிந்தபடி சென்றது.

# சூழல் பாதுகாப்பு

இயற்கைச் சூழல் என்பது நாம் வாழுமிடம். இவ் இயற்கைச் சூழல் இயற்கையால் ஆக்கப்பட்டது. இயற்கைச் சூழல் புனிதமானது. இது நிலம் , நீர் , தீ, காற்று மற்றும் ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களினால் ஆக்கப்பட்டது. இவை மனிதனுக்கு எந்தவொரு தீங்கையும் விளைவிக்காதவை. எமது சூழல் நாம் வாழுமிடம் ஆதலால் மிகவும் அழகாகவும் தூய்மையாகவும் இருத்தல் வேண்டும். எமது சூழலால் எமக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. ஆனால் மனிதர்களாகிய நாம் தான் அறிவில்லாதவர்களாய் அதனை மாசடையச் செய்கின்றோம். எனவே சூழலைப் பாதுகாப்பது மனிதர்களாகிய எம்முடைய தலையாய கடமையாகும்.

எமது சூழலிலுள்ள அங்கங்களுள் முதலிடம் பிடிப்பது நிலம் ஆகும். நாம் நிலமென்னும் பஞ்ச பூதத்தினால் பல நன்மைகளைப் பெறுகின்றோம் என்பதனை எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா? இல்லை. ஆதனால் பல நன்மைகளைப் பெற்றுக் கொண்டு அதை மாசுபடுத்திக் கொண்டிருக்கிறோம். இது நமக்கு நியாயமாகத் தோன்றுகிறதா? நிலம் நமக்க உணவு தரும் தாவரங்களையயம் நமது வாழ்விடங்கழளயும் நம்மையும் தாங்குகிறது. நிலம் இல்லாவடில் நம்மால் உயிர் வாழ முடியாது.

தாவரங்களை நாட்டி பயிர் செய்வதற்கு நிலமே எமக்கு பிரதானமானவொன்றாக காணப்படுகிறது. நிலம் கொண்டிருக்கும் வளமான மண்ணினால் தாவரங்கள் வளர்கின்றன. நிலத்தின் மண் தாவரங்களின் வேரை இறுக்கிப் பிடித்து தாவரங்களக்கு ஊன்று கோலாக விளங்ககிறது. நாம் வாழும் வீட்டின் அத்திவாரம் கூட நிலத்திலேயே போடப்படகிறது. நாம் இன்று வீதியில் நடந்து செல்லும் பொழுது நம்மை நிலமே தாங்குகிறது.

ஆனால் நன்றி கெட்ட மனிதர்களாகிய நாம் நிலத்தை பாதுகாப்பதேயில்லை. அதனை மேலும் அசுத்தப்படுத்தி வருகிறோம். நிலத்தில் துப்புகிறோம். குப்பைகளைக் கொட்டுகிறோம். நிலத்தை தோண்டி மண்ணரிப்பை ஏற்படுத்துகிறோம். இவற்றால் நிலமா பாதிப்படைய போகின்றது.

இல்லை. நாமே பாதிப்படைகின்றோம். ஆகவே நாம் இவ்வாறான நிலத்தை பாதிக்கும் செயல்களிலிருந்து விடுபடுவோமேயானால் நிலத்தை நன்கு பாதுகாத்து பயன்பெற முடியும்.

அடுத்து நீர் வளத்தை பார்ப்போம். எமது பூமியில் முக்கால்வாசிப் பகுதி நீரினால் ஆனது. இதில் பெரும் பகுதி கடல் நீர். மிகவும் குறைந்தளவு நீரே எமது பாவனைக்கு உகந்தது. எனவே நாம் நீரை அசுத்தப் படுத்தாமல் பாதுகாக்க வேண்டும். நீர் வளம் எமது சூழலில் ஆறுகளாய் நதிகளாய் கடலாய் கிணறுகளாய் மற்றும் மழையாய் காணப்படுகிறது. எமது உயிர் வாழ்க்கைக்கு நீர் அத்தியாவசியமானது. குளிப்பதற்கும் ஆடைகளை தோய்ப்பதற்கும் விவசாயம் செய்யவும் போக்குவரத்துக்கும் மின்சாரத்தை பெற்றுக் கொள்ளவும் வேறு வீட்டுத் வேலைகளுக்கும் தேவைப்படுகிறது.

நாம் நீரினால் பல நன்மைகளைப் பெற்றுக் கொண்டு அதனை மாசுபடுத்துகிறோம். நதிகள் மற்றும் ஆறுகளில் குப்பைகளைக் கொட்டுகிறோம். ஆறுகளில் நிலம் தோண்டி இரத்திகக் கற்களை பெறுகின்றோம். ஆத்துடன் இரசாயணப் பதார்த்தங்களை நீருடன் கலக்கின்றோம். இவ்வாறாக நாம் நீரை நாசமாக்குகின்றோம்.எனவே நீர் வளத்தை அசுத்தமாக்காது பாதுகாத்தல் நமது தலையாய கடமையாகும்.

அடுத்து வளங்களுள் மிக முக்கியமானது காற்று வளமாகும். நாம் காற்று இன்றி சுவாசிக்க இயலாது. பெறுமதி வாய்ந்த காற்று வளத்தை நாம் பேணிப் பாதுகாக்க மறந்துவிட்டோம். வாகனப் புகையாலும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகையாலும் சிகரெட் புகையினாலும் எமது சூழல் மாசடைகிறது. இதனால் காற்று நச்சுத்தன்மையடைந்து எமக்கு பல நோய்களை உண்டாக்குகிறது.

எனவே நிலத்தில் கழிவுகளை கொட்டாது அதிகளவு கட்டடங்களை கட்டாது நீருடன் கழிவுகளைக் கலக்காது வாகனப் பாவனையை இயன்றளவு குறைத்து எமது சூழலை மாசடையாது பாதுகாப்போம்.

# இனிமைத் தமிழ்மொழி

இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு
இன்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!
கனியைப் பிளிந்திட்ட சாறு – எங்கள்
கதியில் உயர்ந்திடயாம் பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்!
நாட்டினர் யாவர்க்கு மேதமிழ் மீதில் (இனிமைத்)

தமிழ் எங்கள் உயிர்என்ப தாலே – வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே
தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ்குன்று மேல்தமிழ் நாடெங்கும் இருளாம்
தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு
தமிழ்என்று தோள்தட்டி ஆடு – நல்ல
தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு! (இனிமைத்)

-பாரதிதாசன்-

➢ உங்கள் உடலில் அணியும் ஆடையை விட, முகத்தில் அணியும் மலர்ச்சி மேலானது. -ரூஸ்வெல்ட்-

# மாணவ மணிகளுக்கு கலாமின் அறிவுரைகள்

மாணவ மணிகளுக்கு டாக்டர் அப்துல் கலாம் 10 அறிவரைகள் வழங்கியுள்ளார். கனவு, கடும் உழைப்பு, நம்பிக்கை என்பனவற்றின் சாரமாகத் திகழும் அந்த அறிவுரைகள் வருமாறு :

1) உறங்கும் போது வருபவை அல்ல கனவுகள். இலட்சியங்களை நிறைவேற்றும் வரை உங்களை உறங்கவிடாமல் இருக்கச் செய்பவையே கனவுகள்.

2) வாழ்வில் வரும் இடர்கள் உங்களை அழிப்பதற்காக வருவதில்லை. உங்களுக்கு உதவ, உங்களுக்குள் மறைந்திருக்கம் ஆற்றலையும் சக்தியையும் நீங்கள் உணர வழி செய்கின்றன. சிரமங்களுக்கும் தெரியட்டும் உங்களோடு மோதுவது சிரமம் என்று.

3) நாம் அனைவரும் சரிசமமான திறமைகளைக் கொண்டவர்கள் அல்ல. ஆனால், சரிசமனான வாய்ப்புக்கள் உள்ளன நமது திறமைகளை வளர்க்க.

4) தோல்வி எனும் நோயைக் கொல்லக்கூடிய சிறந்த மருந்து, நம்பிக்கையும் கடும் உழைப்புமே. நிச்சயம் அவை உங்களை ஒரு வெற்றியாளனாக ஆக்கும்.

5) விரைவாகக் கிடைக்கக்கூடிய செயற்கையான சந்தோசங்களுக்குப் பின் ஓடாமல் , செறிவான இலக்கை அடைய அர்ப்பணிப்போடு செயற்படுங்கள்.

6) முதல் வெற்றிக்குப் பின் ஓய்வெடுக்காதீர்கள். இரண்டாவதில் தோற்க நேரிடின் ஏராளமான உதடுகள் காத்திருக்கும் உங்கள் முதல் வெற்றி வெறும் அதிர்ஷ்டத்தில் கிட்டிய ஒன்றெனச் சொல்வதற்கு.

7) தாய்நாட்டை வளர்ச்சி பெற்ற நாடாக மாற்ற ஒவ்வொரு இளைஞர்களும் தொழில் முனைவர்களாக, தொழில் அதிபர்களாக ஆகவேண்டும்.

8) வித்தியாசமாகச் சிந்திக்கும் துணிச்சல் , எவரும் சென்றிராத பாதையில் பயணித்து புதியதைக் கண்டுபிடிக்கும் தைரியம் , இயலாத ஒன்றெனக் கருதப்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வ கண்டு வெற்றி பெறுதல் ஆகிய உயரிய திறமைகளை வளர்த்துக்கொள்ளப் பாடுபட வேண்டும்.

9) சிந்தனையே முதலீடு; முனைப்பே வழி; கடும் உழைப்பே தீர்வு.

10) நம் நாட்டுக்கு வெற்றியை விடக் குறைந்த எதையும் நன்றியாகச் செலுத்த முடியாது. வெற்றியே நமது இலட்சியமாக இருக்கட்டும்.

➢ யார் அதிகமாகக் கேள்வி கேட்கிறார்களோ, அவர்களே அதிகமாகக் கற்றுக்கொள்ளவும் தக்கவைத்துக் கொள்ளவும் செய்கிறார்கள்.

-பிரான்சிஸ்

# பொது அறிவு

1) தங்கத்தின் வேதியல் பெயர் - அயூரியம்
2) உலகின் மிகப் பழமையான மியூசியம் - ஆஸ்மோலியன்
3) சிரிக்க வைக்கும் வாயு – நைட்ரஸ்
4) ஒரே ஆண்டில் 7 புலிட்சர் விருதுகளை வென்ற அமெரிக்கப் பத்திரிகை -நியூயோர்க்டைம்ஸ்-
5) பதினொரு நாடுகளை எல்லையாகக் நாடு - சீனா
6) இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் - C.V ராமன்
7) சூரியனை மிக வேகமாக சுற்றும் கிரகம் - புதன்
8) புயல் உருவாகப் போவதை முன்கூட்டியே அறிவிக்கும் கருவி – சீஸ்மோகிராஃப்
9) தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நூல் - மோகனாங்கி
10) பஞ்ச தந்திர கதைகளை எழுதியவர் - விஷ்ணு சர்மா
11) ஈக்களின் சுவை உணர் உறுப்பு – நாக்கு
12) தமிழில் முதல் நாவல் எழுதியவர் - மாயூரம் வேதநாயகம் பிள்ளை
13) தமிழில் முதலில் வெளிவந்த உரைநடை நாவல் - பிரதாப முதலியார் சரித்திரம்
14) வட மாகாணத்தின் தேசிய மலர் - வெள்ளைத் தாமரை
15) இலவசக் கல்வி முறையினை அறிமுகம் செய்த நாடு – நெதர்லாந்து

# கண்டுபிடிப்புக்களும் கண்டுபிடிப்பாளர்களும்

1) மின்காந்தக் கொள்கை – மாக்ஸ்வெல்

2) இலத்திரன் - J.J தாம்சன்

3) தொலைக்காட்சி – J.L பெயர்ட்

4) அம்மைத் தடுப்பூசி – எட்வேட் ஜென்னர்

5) இதயமாற்று அறுவைச் சிகிச்சை – கிறிஸ்டியன் பேனாட்

6) விசர்நாய்க்கடி மருந்து – லூயி பாஸ்ரர்

7) கோள்களின் நீள்வட்டப்பாதை – ஜோகன்னஸ் கெப்லர்

8) பக்ரீரியா – அன்ரன் வான் லியூவன் குக்

9) அனஸ்தீஸியா – வில்லியம் மோர்டன்

10) கம்பியூட்டர் - சார்ல்ஸ் பாபேஜ்

11) இரத்த ஓட்டம் - வில்லியம் கார்லி

12) X- Ray - ஸ்ரோன்ஜன்

13) நியூத்திரன் - ஜேம்ஸ் சட்விக்

14) தொலைபேசி – கிரகம்பெல்

15) குளிர்சாதனப் பெட்டி – ஜேம்ஸ் ஹாரிசன்

# கொடை வள்ளல்

மாக பாரதத்தில் கர்ணன் அதிமுக்கியமான, கம்பீரமான ஒரு பாத்திரம் என்ற சிறப்பும் அத்துடன் கழிவிரக்கத்துக்கு உரிய பாத்திரம் என்றால் அது கர்ணன் என்றே சொல்ல வேண்டும். கர்ணனது பிறப்பு முதல் இறப்பு வரையும் அவனுடனான சாதி விளையாட்டை விதியானது தொடர்ந்து கொண்டே இருந்தது. பல்வேறு சந்தர்ப்பங்களில் அவனுக்குக் கிடைத்த சாபங்களும் அவனைத் துரத்திய படியே தானிருந்தன. இவற்றுக்குப் புறம்பாக அதர்மத்தை அழிக்கவென அவதாரம் எடுத்த கிஷ்ணன் கர்ணன் மட்டிற் செய்த பல்விதமான சூழ்ச்சிகள் யாவுமே அந்த வீரத்திருமகனின் வீழ்ச்சிக்கே வழி வகுத்தன. பிறந்தது ஓரிடமாகவும் வளர்ந்தது வேறிடமாகவும் இரட்டை நிலை வாழ்கைக்குத் தள்ளப்பட்டவன் கர்ணன்.

அரச குலத்தின் இறுக்கமான மரபு எல்லைகளைத் தகர்த்தெறிந்து தனது இளம் பருவத்திலேயே துரியோதனனுடன் மாசிலா நட்புப் பூண்டவன் கர்ணன். திருதராட்டினது தேரோட்டி அதிரதனின் வளர்ப்பு மகன் என்ற அடையாளமே அதற்கு வாய்ப்பாக அமைந்தது.துரியோதனின் அவ்வப்போத காலமறிந்கு செய்த பேருதவிகளாலும், அதிசயிக்கத்தக்க நடைமுறைகளினாலும் நண்பன் என்ற நிலைக்கும் மேலாக அவனைத் தெய்வமாகவே மதித்தவன் கர்ணன். மார்புக் கவசமும் காதணிகளாக கமண்டலங்கள் மட்டும் தான் அவனோடு ஒட்டிப்பிறந்தவை என்ற சொல்ல முடியாது. தன்னலமற்ற ஈகைத்திறனும் செய்நன்றி மறவாமையும் அவனுடன் கூடப்பிறந்தவை என்று சொல்ல முடியாது. கொடையில் மட்டுமல்லாது உயிரே போகும் நிலை வந்த போதும் கொடுத்த வாக்குறிதியைக் காப்பாற்றும் பண்பிலும் குன்றென நிமிர்ந்து நின்றவன் கர்ணன்.

பாண்டவர்களுக்குத் தொல்லை கொடுப்பதிலும் குழி பறிப்பதிலும் என்றும் குறியாக இருக்கும் துரியோதனனின் அரசசபையிலே ஆலோசனை ஒன்று அரங்கேறிக் கொண்டிருந்தது. வல்லவர்களும் நல்லவர்களுமான பீஸ்மர், துரோணர், விதுரர் போன்றோரும் அவையிலே வீற்றிருக்கின்றனர். அவர்களது பேச்சுக்கும், அறிவுரைகளுக்கும் அந்தச் சபையிலே மதிப்பு இல்லாத காரணத்தினால் அவர்கள் யாவருமே பேசாமடந்தைகள் நிலையில் இருந்தார்கள். பாண்டவர்களோடு நேருக்கு நேர் மோதாமல் நயவஞ்சகமான முறையிலே சூழ்ச்சி வலைக்குள்ளே அவர்களை சிக்க வைப்பதே பயன்தர வல்லது என்று சதியாலோசனைகளின் தலைவனான சகுனி தமது மருமகனான துரியோதனனுக்கு எடுத்துச் சொன்னார். உடனே எழுந்து நின்று அதனைப் பலமாக ஆட்சேபித்தான் கர்ணன். தனது வீரத்தின் மேலே தளராத உறுதி கொண்ட அவன் குறுக்கு வழி கோழைகளுக்கு உரியது. நேர்வழியே விரர்களுக்கானது என்று கர்சித்தான். கர்ணனின் தன்னம்பிக்கை மிக்க வார்த்தைகளை கவிவடிவில் வடித்துள்ளார் வில்லிபுத்தூரார்.

“வெஞ்சிலை குனித்தோரம்பு
யான் விடின் வெகுண்டவேந்தர்
அஞ்சுவின் புகுவரல்லார் யாவரே
எதிர்க்க வல்லார்
வஞ்சனை கொண்டுவெல்ல
மதிப்பது வாளால்வெல்ல
அஞ்சின மாயினன்றோ
என்றனன் அங்கர்மோமான்”

கௌரவர் தலைவனும் தனது ஆருயிர் நண்பனுமாகிய கர்ணனின் வீரத்தின் மீது அதீத நம்பிக்கை வைத்திருந்தான். தயக்கமின்றி குருசேஸ்த்திரதில் இறங்க துரியோதனனுக்கு உத்வேகம் கொடுத்தது அந்த நம்பிக்கை தான். பீமர் துரோணர் போன்றோர் பெரும் வீரர்கள் என்றபோதும் பாண்டவர்கள் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பின் ஆளத்தைத் துரியோதனன் அறிந்தே வைத்திருந்தான். அர்ஜுனன் மீது பீஸ்ம, துரோணர்கள் கொண்டிருந்த பேரன்பையும் துரியோதனன் அறிந்தவன் தான். ஆதலால் அவர்கள் தமக்கு வெற்றி கிடைக்கும் விதத்தில் விசுவாசமாகப் போராடமாட்டார்கள் என்ற உண்மையும் கௌரவர் தலைவனுக்கு நன்கு தெரியும். கர்ணன் என்ற தன்னிகரற்ற வீரன் ஒருவனாலேயே சுலபமாக வெற்றிக் கனியை எட்ட முடியும் என்று திடமாக நம்பி இருந்தான் துரியோதனன் கொண்டிருந்த பேரண்பையும் துரியோதனன் அறிந்தவன் தான். ஆதலால் அவர்கள் தமக்கு வெற்றி கிடைக்கும் விதத்தில் விசுவாசமாக போராடமாட்டார்கள் என்ற உண்மையும் கௌரவர் தலைவனுக்கு நன்கு தெரியும். கர்ணன் என்ற தன்னிகரற்ற வீரனபார்த் ஒருவனாலேயே சுலபமாக வெற்றிக் கனியை எட்ட முடியும் என்று திடமாக நம்பியிருந்தான் துரியோதனன். ஆனால் நாராயணமூர்த்தியின் அம்சமான அந்தப் பார்த்த சாரதி கையிலே சங்கை எடுத்து ஊது ஊது என்று ஊதித்தள்ளியே கௌரவர் தலைவன் கட்டியிருந்த மனக்கோட்டையை மண்கோட்டை போலச் சிதற வைத்தான்.

களத்திலே வீழ்ந்த போதும் காவியத்தில் வாழ்கின்றான் கர்ணன்.

அ. நிமலினி

2017 கலை

## கம்பியூட்டர் - சில விளக்கச் சொற்கள்

- PC – Personal Computer
- BIOS – Basic Input Output System
- MOUSE – Most USE full (device)
- CD – Compact Disk
- CDR - Compact Disk Recordable
- CDRW - Compact Disk Rewritable
- CDROM – Compact Disk Read Only Memory
- CDRAM - Compact Disk Randam Access Memory
- VCD – Video Compact Disk
- DVD – Digital Versatile Disk
- CRT – Cathode Ray Tube
- CPU – Central Processing Unit
- USB – Universal Serial Bus
- VIRUS – Very Important Resoures Under Size
- WWW – World Wide Web
- URL - Universal
- LAN – Local Area Network

## இலங்கையின் கல்வி பற்றிய தகவல்கள்

- இலவசக் கல்வியின் தந்தை – C.W.W கன்னங்கரா
- இலவச பாடநூல் - 1989 முதல் வழங்கப்படுகிறது
- இலவச மதிய உணவு - 1989 முதல் வழங்கப்படுகிறது
- இலவச பாடசாலைச் சீருடை - 1993 முதல் வழங்கப்படுகிறது
- பாடசாலை சாரணர் இயக்கம் - 1917 இல் நிறுவப்பட்டது
- தேசிய பாடசாலை – 1987 இல் ஆரம்பிக்கப்பட்டது
- இலங்கை பல்கலைக்கழகம் - 1942 (கொழும்பு)

## இலங்கையின் தேசியம்

- தேசிய கீதம் - "நமோ நமோ தாயே"
    - சிங்களத்தில் இயற்றியவர் - ஆனந்த சமரக்கோன்
    - தமிழில் மொழிபெயர்த்தவர் - புலவர்மணி நல்லதம்பிப்பிள்ளை
    - ஆங்கில மொழிபெயர்ப்பு - C.W.W கன்னங்கரா
- தேசியக் கொடி - வாளேந்திய சிங்கம்
- தேசிய மலர் - நீல அல்லி
- தேசிய மரம் - நாக மரம்
- தேசிய பறவை - காட்டுக் கோழி
- தேசிய மிருகம் - மர அணில் / யானை

# ஐ.நா பற்றிய தகவல்கள்

- ஐ.நா சபை என்பதன் முழுப்பெயர் ?
  ஐக்கிய நாடுகள் சபை
- ஐ.நா சபை ஏன் உருவாக்கப்பட்டது ?
  இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக அமைதி, பரஸ்பர பாதுகாப்பு போன்றவற்றை உருவாக்க உலக நாடுகள் தமக்கள் ஏற்படுத்திக்கொண்டது
- ஐ.நா சபையின் முதல் கூட்டம் எந்த ஆண்டு எங்கு நடைபெற்றது ?
  1946 இல், இலண்டனில்
- ஐ.நா பாதுகாப்புச் சபையில் உள்ள நிரந்தர உறுப்பு நாடுகள் எவை?
  சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா
- ஐ.நா பொருளாதார தலைமையகம் எங்குள்ளது ?
  நியூயோர்க்
- ஐ.நா சபை எப்போது உருவாக்கப்பட்டது ?
  24.10.1945
- ஐ.நா சபையின் மொத்த உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை ?
  193 நாடுகள்
- ஐ.நா தினம் எப்போது கொண்டாடப்படுகிறது ?
  ஒக்ரோபர் 24
- ஐ.நாவின் சின்னம் யாது? ஐ.நாவின் சின்னம் எதை குறிக்கிறது?
  இளம் நீலத்தின் நடுவே அமைந்த வெள்ளை வட்டம்
  உலக அமைதி

# உலகில் வழங்கப்படும் விருதுகள்

- ஓலாப் பால்மே பரிசு
- டெம்பிள்மன் பரிசு
- யூதாண்ட் விருது
- ஜெஸ்ஸி ஓவன்ஸ் விருது
- ஊலக் உணவு விருது
- காமன்வெல்த் பிராந்திய எழுத்தாளர் விருது
- ஓலிம்பிக் ஆர்டர் விருது
- புலிட்சர் விருது
- கலிங்கா விருது
- மக்சாஸே விருது
- மகாத்மா காந்தி உலக அமைதி விருது
- நோபல் விருது
- ஐ.நா சுற்றுச் சூழல் விருது
- புக்கர் பரிசு
- சர்வதேச புரிதிறனுக்கான ஜவஹர்லால் நேரு விருது

# இணைமொழிகள்

- ✓ அக்கம் பக்கம்
- ✓ அகட விகடம்
- ✓ அடி முடி
- ✓ அடிக்கடி
- ✓ அடி பிடி
- ✓ அங்குமிங்கும்
- ✓ அரை குறை
- ✓ அல்லும் பகலும்
- ✓ அற்ப சொற்பம்
- ✓ ஆதிஅந்தம்
- ✓ ஆய்நது ஓய்ந்து
- ✓ ஆசாபாசம்
- ✓ இன்ப துன்பம்
- ✓ ஈடும் இணையும்
- ✓ ஈன இரக்கம்
- ✓ ஓடி ஆடி
- ✓ உருண்டு புரண்டு
- ✓ ஊண் உறக்கம்
- ✓ எலும்பும் தோலும்
- ✓ ஏழை எளியவர்
- ✓ ஏட்டிக்குப் போட்டி
- ✓ ஏற்ற இறக்கம்
- ✓ பேரும் புகழும்
- ✓ உயர்வு தாழ்வு
- ✓ உடை நடை

- நண்பனையும் நேசி. எதிரியையும் நேசி. நண்பண் வெற்றிக்கு துணையாய் இருப்பான். ஏதிரி வெற்றிக்கு காரணமாய் இருப்பான்.

# கலைச் சொற்கள்

1. Whats app – புலனம்.
2. You Tube – வலையொளி
3. We Chart – அளாவி
4. Messenger – பற்றியம்
5. Twitter – கீச்சகம்
6. Telegram – தொலைவரி
7. Skype – காயலை
8. Bluetooth – ஊடலை
9. Wi-Fi – அருகலை
10. Hot Spot – பகிரலை
11. Broadband – ஆலலை
12. Online – இயங்கலை
13. Offline – முடங்கலை
14. GPS – தடங்காட்டி
15. Hard Disk – வன்தட்டு
16. CCTV – மறைகாணி
17. L.E.D – ஒளிர்வு முனை
18. 3D – முத்திரட்சி
19. 2D – இருதிரட்சி
20. Projecter – ஒளிவீச்சி
21. Printer – அச்சுப் பொறி
22. Scanner – வருடி
23. Router – திசைவி
24. Selfie – தம்படம்
25. Digital – எண்மானம்

திரு. க. சுபராஜ்,
ஆசிரியர்

# தமிழ் இலக்கியம்

## புகழ் பெற்ற நூல்களும் ஆசிரியர்களும்

### பத்துப்பாட்டு நூல்கள்

1. திருமுருகாற்றுப்படை - நக்கீரர்
2. பொருநராற்றுப்படை - முடத்தாமக்கண்ணியார்
3. சிறுபாணாற்றுப்படை - நல்லூர்நத்தத்தனார்
4. பெரும்பாணாற்றுப்படை - உருத்தரங்கண்ணனார
5. மலைபடுகடாம் - பெருங்கௌசிகனார்
6. முல்லைப்பாட்டு - நப்பூதனார்
7. குறிஞ்சிப்பாட்டு - கபிலர்
8. பட்டினப்பாலை - உருத்தரங்கண்ணனார்
9. நெடுநல்வாடை - நக்கீரர்
10. மதுரைக்காஞ்சி - மாங்குடி மருதனார்

### பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

**அறநூல்கள் - 11**

1. நாலடியார் - சமண முனிவர்கள்
2. நான்மணிக்கடிகை - விளம்பி நாகனார்
3. இன்னா நாற்பது - கபிலர்
4. இனியவை நாற்பது - பூதஞ்சேந்தனார்
5. திரிகடுகம் - நல்லாதனார்

6. ஆசாரக்கோவை - முள்ளியார்

7. பழமொழி - முன்றுரையனார்

8. சிறுபஞ்சமூலம் - காரியாசான்

9. ஏலாதி - கணிமேதாவியார்

10. திருக்குறள் - திருவள்ளுவர்

11. முதுமொழிக்காஞ்சி - மதுரைக் கூடலூர் கிழார்

<u>அகநூல்கள் - 6</u>

1. ஐந்திணை ஐம்பது - மாறன் பொறையனார்

2. துணைமொழி ஐம்பது - கண்ணல் சேந்தனார்

3. ஐந்திணை எழுபது - மூவாதியார்

4. திணைமாலை நூற்றைம்பது - கணிமேதாவியார்

5. கைந்நிலை - புல்லங்காடனார்

6. கார் நாற்பது - கண்ணன் கூத்தனார்

<u>புறநூல்</u>

1. களவழி நாற்பது - பொய்கையார்

திருமதி சி. மயூரன்.

ஆசிரியர்.

## ஈரநிலங்களும் அவற்றின் முக்கியத்துவமும்

உலகில் காணப்படுகின்ற ஒவ்வொரு உயிர்ச்சூழலும் தனித்துவமான பண்புகளையும், தமக்கே உரித்தான பயன்பாடுகளையும் கொண்டுள்ளது.இவ்வகையில் ஈரநில உயிர்ச்சூழலானது பௌதிகச் சூழலில் பெறுமதி வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது.ஈரநிலங்கள் என்பது நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நீரால் மூடப்பட்டிருக்கும் இடங்களைக் குறிக்கிறது. விசேட இயற்கைச் சூழல்களான ஈரநிலங்கள் கரையோரஈரநிலங்கள், நிலப்பகுதிஈரநிலங்கள் எனஇருவகைப்படுகின்றன. ரம்சார் உடன்படிக்கையின் கீழ் ஈரநிலங்களை கரையோர ஈரநிலங்கள், உள்நாட்டுஈரநிலங்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்கள் என மூன்று வகைகளாக பாகுபடுத்தலாம்.கரையோர ஈரநிலங்கள் என்பதனுள் நதிமுகத்துவாரங்கள், வற்றுப்பெருக்குச் சதுப்புநிலங்கள், உவர்நீர்ப்பகுதிகள், கடனீரேரிகள், கண்டல் சதுப்புநிலங்கள், முருகைக்கற்பாறைகள், ஓங்கல்கள் போன்றன உள்ளடங்குகின்றன.உள்நாட்டு ஈரநிலங்களாக ஏரிகள்,ஆறுகள்,நீரோடைகள்,நீர்வீழ்ச்சிகள்,வெள்ளச்சமவெளிகள் போன்றனவும் மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்களாக கால்வாய்கள், குளங்கள்,நீர்தேங்கிநிற்கும்பகுதிகள், கழிவுநீர் சுத்திகரிக்கும் பகுதிகள் போன்றனவும் காணப்படுகின்றன.சூழலியல் மற்றும் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இவ் ஈரநிலங்கள் உலகளாவிய ரீதியில் இன்று அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்ற வேளையில் ஈரநிலங்களை பாதுகாக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் எம் அனைவரதும் கடமையாகும்.

ஈரநிலங்கள் சூழலியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் சார் நிலையில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக காணப்படுகின்றன.சூழலியல்சார் முக்கியத்துவங்களாக உயிர்ப்பல்வகைமையைப் பேணுதல், தாழ்நிலங்களை பாதுகாத்தல், அடையல்கட்டுப்பாடு, நீரின்தரத்தை பேணல் போன்றன காணப்படுகின்றன. விலங்குகள் பறவையினங்களின் உயிர்ச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் உள்ளூருக்குரிய பறவையினங்களை பாதுகாக்கவும் வெளியூருக்குரிய பறவையினங்களை கவரவும் ஈரநிலங்கள் உதவுகின்றன. ஈரநிலங்கள் வெள்ளத்தினுள் அமிழும் நிலங்களை பாதுகாப்பதனுடன் கரையோர எல்லை நிலங்களுக்குள் கடல்நீரின் உவர்த்தன்மை ஊடுருவலிலிருந்தும் பாதுகாக்கிறது. கரையோரப்பகுதிகளில் மணற்குவியல்களை பாதுகாப்பதனுடன் உள்நாட்டுப் பொருட்கள் கடலினுள் காவிச்செல்வதை தடுக்கிறது. அடையல்கள் கலந்த நீரானது ஈரநிலத்தினூடாக செல்கின்ற போது அவ் அடையல்கள் ஈரநிலத்தில் படியவிடப்படுகின்றன.இது ஏரிகள்.ஆறுகள் போன்றவற்றில் உவராக்கம் ஏற்படுவதை தடுக்கிறது. ஈரநிலங்களானது மேற்பரப்பு மற்றும் தரைக்கீழ்நீரிலிருந்து மாசுபடுத்தும் கனியங்கள் , அடையல்களை நீக்கி ஒரு உயிர்வாழும் வடிகட்டியாக தொழிற்படுகிறது.இவ்வாறாக சூழலியல் ரீதியாக ஈரநிலங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

பொருளாதார நடவடிக்கைகளான விவசாயம், மீன்பிடி ,சுற்றுலா, மூலப்பொருள் கிடைப்பனவு, வேலைவாய்ப்பு போன்றவற்றிலும் ஈரநிலங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.உலகளாவிய ரீதியில் 3 பில்லியன் மக்கள் ஈரநிலங்களின் மூலம் கிடைக்கும் அரிசியில் தங்கியிருக்கிறார்கள்.மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்களான குளங்கள் விவசாயத்திற்கு வேண்டிய நீரை வழங்குகின்றன. மக்களின் உணவுத்தேவையில் மீன்களை வழங்குவதில் ஈரநிலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.இலங்கையின் மொத்த மீன்பிடியில் 15மூ ஆனவை மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்களில் இருந்து பெறப்படுகிறது.ஈரநிலங்கள் எழில்மிகுந்தனவாகவும் சுற்றுலாப்பயணிகளை கவருவனவாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக இலங்கை, இந்தியா, மாலைதீவு போன்ற தெற்காசிய நாடுகளில் கரையோர உல்லாசப்பயணம் வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்றது.கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு தேவையான மூலப்பொருள் மற்றும் நீர் வசதி கிடைக்கும் இடங்களாக ஈரநிலங்கள் காணப்படுகின்றன. நீர்மேவுசமவெளிகளில் அடையல்கள் ஒன்று சேர்வதால் அப்பிரதேசங்களில் களிவகைகள் அதிகளவில் தேங்கிக் காணப்படும் இவை ஓட்டுக்கைத்தொழில், செங்கல்கைத்தொழில்களுக்கு மூலப்பொருளாக பயன்படுகின்றது. பெரும்பாலான தொழிற்சாலைகள் நீர்வசதி கிடைக்கும் இடங்களிலேயே அமைவு பெறுகின்றன.இவ்வாறாக பொருளாதார ரீதியில் ஈரநிலங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

சமூக கலாச்சார ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக ஈரநிலங்கள் காணப்படுகின்றன.ஆறுகள் வெள்ளச்சமவெளிகள் போன்றவை வரலாற்று நாகரீகங்களின் ஆரம்பப்பருவமாக காணப்படுகின்றன. மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்களான வரலாற்றுக்குளங்கள், வயல்நிலங்கள் போன்றன ஈரநிலங்களுக்கும் உயர்கலாச்சார சொத்துடைமைக்கும் அடையிலான இடைத்தொடர்பை எடுத்துக்காட்டுகின்றன.இவ்வாறாக சமூகவியல் ரீதியில் ஈரநிலங்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக காணப்படுகின்றன.

ஈரநிலங்கள் மனித செயற்பாடுகளினாலும், சூழற்செல்வாக்கினாலும் அச்சுறுத்தலுக்குள்ளாகின்றன. மனித செயற்பாடுகள் என்னும் போது கட்டுமானங்கள், கழிவகற்றல், ஈரநிலங்களை அகழ்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.அதே போன்று வரட்சி, சூறாவளி, புயல், அரிப்பு போன்ற சூழற்காரணிகளாலும் ஈரநிலங்கள் குறைவடைகின்றன. அதிகரித்து வரும் சனத்தொகைக்கு தேவையான வீடுகள், வைத்தியசாலைகள், பாடசலைகள், கைத்தொழிலுக்குத் தேவையான கட்டிடங்கள் போன்றவற்றிற்கான நிலத்தேவையை ஈடுசெய்வதற்கு ஈரநிலமீட்பு இடம்பெறுகின்றது.விவசாய இரசாயன பதார்த்தங்கள், வீட்டுக்கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் போன்றன ஈரநிலங்களில் கொட்டப்படுகிறது. ஈரநிலங்களில் உள்ள வளங்களான அலங்காரமீனினங்கள், கண்டல்த்தாவரங்கள், ஈரநிலக்கனியவகைகள் போன்றன மனிதனால் சுரண்டப்படுகின்றன. இவ்வகையில் ஈரநிலங்களுக்கான அச்சுறுத்தல் காணப்படுகின்றன.

மனித செயற்பாடுகளால் ஈரநிலங்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகின்ற போது பல சூழலியல்சார் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. ஈரநில மீட்பினால் அடைமழை நாட்களில் நகர வீதிகளில் நீரிநிரம்பி வழிந்து வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. ஈரநிலங்களை அண்டிய மலைச்சரிவுகளில் காடுகள் அழிக்கப்படுவதால் வளமான மண்படை கழுவிச்செல்லப்பட்டு நிர்த்தேக்கங்களில் படியவிடப்படுவதால் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படுவதுடன் நீர்நிலைகள் படிப்படியாக தூர்ந்து போகக்கூடும்.இதனால் நீர்மின் உற்பத்தியும் பாதிக்கப்படும். ஈரநிலங்களில்கழிவுகளை கொட்டுகின்ற போது நீர்வாழ் அங்கிகள் பாதிக்கப்படுகின்றன.

பௌதிக மற்றும் மானிடச் சூழலில் பெறுமதி மிக்கனவாக காணப்படும் ஈரநிலங்களை பாதுகாத்தல் அவசியமாகும்.ஈரநிலங்களை பாதுகாத்தல் தொடர்பாக சர்வதேச ரீதியில் பல நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டன. 1971.02.02 ஆம் திகதியன்று ஈரநில உயிர்ச்சூழலை பாதுகாப்பதற்காக றம்சார் உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. இப்பிரகடனம் 1975 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.இவ் உடன்படிக்கையின் படி ஈரநிலங்கள் சர்வதேச முக்கியத்துவத்தின் அடிப்படையில் றம்சார் நிலமாக தெரிவு செய்யப்பட்டு அவ் நிலங்களை சிறப்பாக பயன்படுத்துவதற்குரிய திட்டங்கள் வகுத்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இலங்கையில் உள்ள ஈரநிலங்களுள் 41 ஈரநிலங்கள் சர்வதேச முக்கியத்துவமுடையனவாக காணப்படுகின்றன.இவ் ஈரநிலங்கள் எமது நாட்டிற்கு மட்டுமன்றி ஏனைய உலக நாடுகளுக்கும் முக்கியத்துவமுடையனவாக அமைவதனாலேயே இவை சர்வதேச முக்கியத்துவமுடையனவாகக் கருதப்படுகின்றன.

மனிதனதும் ஏனைய உயிரினங்களினதும் நிலைத்திருப்புக்கு ஏற்றவாறாக ஈரநிலங்களைத் தற்காலத்திலும் எதிர்காலத்திலும் சிறப்பாக பயன்படுத்த வேண்டும். ஆரம்பகாலம் முதல் மனிதனுக்கு மட்டமன்றி அனைத்து உயிரினங்களுக்கும் பல்வேறு வழிகளில் சேவையாற்றி வருகின்ற ஈரநிலங்களை எதிர்கால சந்ததியினருக்காக பேணிப்பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பும் கடமையுமாகும்.

செல்வி. ச. சர்மிளா **(B.A HONS)**,

ஆசிரியர்.

# நன்றிப் பூக்கள்

"**அலைமாடம் - 4**" சஞ்சிகைக்கு ஆக்கங்களைத் தந்து உதவிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் சஞ்சிகையை வடிவமைக்க உதவிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றிப் பூக்களை சொரிந்து நிற்கின்றோம்....

நன்றி

தமிழ் இலக்கிய மன்றம்